# பன்முக நோக்கில்
# பதினொராம் திருமுறை

பதிப்பாசிரியர்கள்
கலாநிதி க. இரகுபரன்
கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
இந்துமத அலுவல்கள் அமைச்சு

நூலின் பெயர் : பன்முக நோக்கில் பதினொராம் திருமுறை

பதிப்பாசிரியர்கள் : கலாநிதி க. இரகுபரன்
கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

முதற் பதிப்பு : 2017

வெளியீடு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248, 1/1, காலி வீதி, கொழும்பு 4, இலங்கை

அச்சு : குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 6

விலை : 800/-

Title : Panmuka Nokkil Pathinoram Thirumurai

Editors : Dr. K. Raguparan
Dr. S. Prasanthan

First Edition : 2017

Published by : Dept. of Hindu Religious & Cultural Affairs
248, 1/1, Galle Road, Colombo 4, Sri Lanka

Printed by : Kumaran Press (Pvt) Ltd
39, 36th lane, Colombo 6

ISBN 978-955-9233-45-9

# நம்பியாண்டார் நம்பியின் சமய நோக்கு

தி. செல்வமனோகரன்

சைவத் தமிழ் வரலாற்றில் திருமுறைகள் பக்திப் பனுவல்களாகச் சிறப்பிக்கப்படுகின்றன. இத்திருமுறைகளோடு அதிகம் இணைத்துப் பேசப்படுபவர் நம்பியாண்டார் நம்பியாவார். இவரது வரலாற்றைக் கூறும் நூல் திருமுறைகண்டபுராணமாகும். திருநாரையூரில் ஆதிசைவமரபில் தோன்றிய இவர், பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசை செய்யும் சந்தர்ப்பத்தில் திருவமுதை அவர் உண்ணவில்லையே என எண்ணித் தன்னை வருத்திய காலத்தில் இறையருளுக்குப் பாத்திரமாகிறார். திருவருளுக்குப் பாத்திரமான இவரின் துணையை நாடிச் சோழஅரசன் திருமுறைகளைத் தேடித் தொகுக்க முனைகின்றான். இறையருளின் வழி, நம்பி தில்லையில் நாயன்மார் பாடல்கள் இருப்பதை அறிந்துரைக்க, அவ்வழி முயன்று பாடலேடுகள் பெறப்படுகின்றன. அவற்றுள் சில செல்லரித்துப் போயின. ஏனையவை நம்பியால் தொகுக்கப்பட்டன. திருமுறையைத் தேடித் தொகுத்ததும் அடியார் வரலாறு கூறும் வகை நூலாகத் திருத்தொண்டர் திருவந்தாதியை இயற்றியதும் இவரது பெரும் பணிகளாகச் சுட்டப்படுகின்றன. இவை தவிர ஒன்பது பிரபந்தங்களையும் இவர் இயற்றியுள்ளார். தனக்கு முன்னிருந்த சைவத்தையும் பின்னிருக்கும் சைவத்தையும் இணைக்கும் பாலமாக - கருத்தியலூடகமாக அவர் விளங்கினார்.

நம்பியின் வரலாறு பொதுவில் இவ்வாறு சுட்டப்படினும் சில ஆய்வுப் பிரச்சினைகள் தவறுகள் ஆராய்ச்சியாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. அவையாவன,

1. திருமுறைகளைத் தொகுப்பித்தவன் 1ஆம் இராஜராஜன்
2. நம்பிவாழ்ந்தகாலம்
3. 11திருமுறைகளையும் தொகுத்தவர் நம்பி எனும் கூற்று

முதலாம் இராஜராஜனுக்கு முன்பே ஆலயங்களில் திருமுறைகள் ஓதப் பெற்றுள்ளன. 'விஜய நந்திவிக்கிரமனாகிய நந்திவர்ம பல்லவனது 17ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி 750) திருவல்லம் கோயிலில் பதிக்கப்பட்ட கல்வெட்டு 'திருப்பள்ளித்தாமம் பறிப்பார்க்கும் திருப்பதிகம் பாடுவாருள்ளிட்ட பல பணி செய்வார்க்கும் நெல்லுநானூற்றுக்காடியும்' என்பது போன்ற பல குறிப்புக்களுள. இது கோயில்களில் திருமுறைபாடப்பட்டதற்குச் சான்றாகிறது[1]. அதேபோல நம்பியாண்டார் நம்பி,'மூவர் திருப் பதிகங்களையும் முன்போலவே திருமுறைகளாகத் தொகுத்தார்' எனும் திருமுறைகண்ட புராண வரி பல உண்மைகளைக் கட்ட விழ்க்கிறது. இங்கு 'முன்போலவே' எனுந்தொடர் நம்பிக்கு முன்பே மூவர் பாடல்கள்'ஏழு' திருமுறைகளாக இருந்தன என்பதை உறுதி செய்கிறது. சுந்தரர்,

> நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்
> கரையனும் பாடியநற்றமிழ் மாலை
> சொல்லியவே சொல்லி யேத்துகப் பானை

எனப் பாடியுள்ளமை முன்னிருவர் பாடல்களில் அவருக்கு இருந்த தாடணத்தைத் தெளிவுறுத்துகிறது. அதே சுந்தரர், தான் இயற்றிதான 'தானெனைமுன் படைத்தான்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தை வருணன் ஊடாக திருவஞ்சைக் களத் திருக்கோயிலில் சேர்ப்பித்ததாக அப்பதிகத் திருக்கடைக்காப்பில் சுட்டிநிற்பதும் பதிகங்களைப் பேணும் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. சம்பந்தருடனும் நாவுக்கரசருடனும் செல்லும் சீடர்கள் அவர் தம் பாடல்களை ஏட்டில் எழுதியுள்ளனர்[2]. வாதிற்கு அழைத்த புத்தநந்தி மீது சம்பந்தரின் 'புத்தச் சமணகழுக்கையர்'

---

1 பன்னிருதிருமுறை வரலாறு - வித்துவான் க.வெள்ளைவாரணன் ப.20

2 வெள்ளைவாரணன். ப.19

எனும் பாடலைப் பாடி இடி விழச் செய்தார் சம்பந்தரது சீடர் என அறியக்கிடக்கிறது[3]. ஆக, மூவர் பாடலைப் பேணுமுறைமை நம்பிக்கு முன்பே இருந்தமை தெளிவாகிறது.

பக்தியியக்கத்தின் வீச்சு குறைந்த அல்லது அத்வைத சிந்தனையின் அறிவுவாத வீச்சு மேலோங்கிய காலகட்டத்தின் நீட்சியாக, சோழரது ஆரம்ப ஆட்சிக் காலத்தில் வடநாட்டு மரபுகள் செல்வாக்குறத் தொடங்கின. இடைக்கால சோழர் காலத்தில் பாசுபத, காளமுகச் சைவப்பிரிவுகளும் செல்வாக்குற்றன. இதனால் மூவர் பாடல்களின் செல்வாக்கை மற்றும் தமிழ்நாட்டுச் சைவத்தைப் பாதுகாக்க அல்லது முடக்க இப்பாடல்கள் தில்லை யில் அறைக்குள் வைத்துப் பூட்டப்பட்டன. அங்கு பேணுதல் நிகழவில்லை; அவை அங்கே உள்ளன எனும் செய்தி இரகசிய மாக்கப்பட்டது. மூவர் பாடலில் தீராக்காதல் கொண்ட சோழமன்னன் அவற்றைத் தேடவிழைந்தார்; கிடைக்கவில்லை; நம்பியாண்டார் நம்பியின் திறனறிந்து அவரை நாடினார். இவர்தம் கூட்டு முயற்சி தில்லையில் பாடல் இருக்கும் செய்தியைத் தெரிவித்தது. அவற்றைப் பெற்று நம்பி மீள்கட்டுமானத்தைச் செய்தார்.

இச்செயற்பாட்டிற்கு முன்னின்றுழைத்த சோழன் யார் என்பதற்குத் திருமுறைகண்ட புராணம், முதலாம் இராஜராஜன் எனப் பதிலளிக்கிறது. ஆனால் இதனைச் சில ஆய்வாளர்கள் ஆதாரபூர்வமாக நிராகரிக்கின்றனர். வெள்ளைவாரணன், நம்பி யின் காலம் கி.பி 9ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி தொடங்கி கி.பி 10ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம் என்கிறார்[4]. முதலாம் ஆதித்த சோழன் மற்றும் அவன் மகன் முதலாம் பராந்தகசோழன் காலமாக இருக்கும் என சதாசிவபண்டாரத்தார் உரைக்கிறார்[5]. இருவரும் கூறும் காலம் ஒன்றேயாகும். திருமுறை கண்ட சோழனாக முதலாம் இராஜராஜன் விளங்கியிருப்பின் ஆதித்தன், கோட்புலி பற்றிக் கூறும் நம்பி,இராஜராஜன் பற்றி

---

3 மேலது

4 வெள்ளைவாரணன். ப.18

5 செந்தமிழ்தொகுதி 45.ப.715

ஒரு சேதியேனும் சுட்டாதுவிட்டது ஏன்? எனும் கேள்வி இயல்பாக எழுகின்றது. திருத்தொண்டர் திருவந்தாதியில் வரும் சிங்களநாடு வென்ற சேதியை வைத்துக்கொண்டு 'சிங்களாந்தகன்' இராஜராஜனே என வாதிப்பவரும் உண்டு. ஆதித்தசோழன் சிங்களநாடு வென்ற செய்தி கூறப்பட்டு அது நிராகரிக்கப்படுகிறது[6]. அத்தோடு தனது கல்வெட்டில் '48' ஓதுவார்களை நியமித்து அவர் பெயரைப் பட்டியற்படுத்திதோடு அவர்களுக்கான கொடுப்பனவு பற்றியும் கல்வெட்டில் எழுதியவன் இராஜராஜன்; தன் அனைத்துப் பணிகளையும் கல்வெட்டிலும் செப்பேட்டிலும் பதித்தவன் அவன்; அவ்வியல்பினன், தானே திருமுறைகண்ட சோழனெனின் அதனையும் கல்வெட்டில் பதித்திருப்பான் என்பது வெள்ளிடையாகும். ஆனால் அவ்வாறான செய்தி எதுவும் இன்று வரை கிடைக்கப்பெறவில்லை. ஆக, திருமுறையைத் தொகுப்பித்த வர் நம்பியின் கூற்றுப்படியும் முதலாம் ஆதித்தனாகவே இருக்க வேண்டும்.

நம்பியினால் பதினொரு திருமுறைகளும் தொகுக்கப்பட்டதாகப் பொதுவில் எடுத்தாளப்படுகிறது. மூவர் தேவாரங்கள் முன்னுளவை போலத் தொகுத்ததோடு மணிவாசகரின் திருவாசகத்தையும் அவர் எட்டாந் திருமுறையாக இணைத்திருக்கலாம். நம்பி யாண்டாரின் காலத்திற்குப் பின்தோன்றிய கண்டராதித்தரது பாடல்கள் - சோழேச்சரப் பதிகங்கள் ஒன்பதாம் திருமுறையில் இடம் பெறுதலும் பதினொராம் திருமுறையில் தன்பாடல்களைத் தானே சேர்த்தார் என்பதுவும் பொருத்தமில என ஆய்வாளர் சிலர் எடுத்துரைக்கின்றனர். குறிப்பாக திருவிசைப்பா நம்பிக்குப்பின் எழுந்தது என்றும் கருவூர்த்தேவர் காலத்தால் இவருக்குப் பிற்பட்டவர் என்றும் கங்கை கொண்ட சோழேச்சரம், ராஜ ராஜேஸ்வரம், போன்ற போற்றப்படும் திருத்தலங்களும் காலத்தால் நம்பிக்குப் பிற்பட்டவை[7] என்றும் எடுத்தாளப்படுகிறது.

---

6 வெள்ளைவாரணன் ப.18

7 வெள்ளை - 22

**சமய நோக்கு**

மனிதன் தான் சார்ந்த சூழலுடன் கொள்ளும் தொடர்பு என்பது மூன்று வழிகளாலானது.

1. பௌதிகத்துடன் ஏற்படுத்தும் தொடர்பு

2. சமூகச்சூழல் - பிறமனிதர்கள்

3. கருத்துச் சூழல் - அறிவெல்லை கடந்த பௌதீகவதீதம்[8]

இறுதியாகச் சுட்டப்பட்ட கருத்தியற் சூழல், சமயம் சார்ந்த ஒன்றாகவே எடுத்தாளப்படுகிறது. வாழ்க்கை என்பதன் பொருளை அறிந்துகொள்ள, மனிதன் ஈடுபடும் செயல்கள் யாவும் சமயம் என்னும் அமைப்பை நோக்கியவையாகவே அமைகின்றன. இதனையே 'எமக்கு இச்சரீரம் கிடைத்ததன் நோக்கம் இறைவனை, தியானித்து முக்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என நாவலரும் கூறிப்போந்தார். அந்த வகையில் நம்பியாண்டார் நம்பி முன்னெடுத்த சமயப் பணிகளின், ஆக்கவிலக்கியங்களின் ஊடாக அவரது சமய நோக்குசார் தனித்துவங்களை ஆராய இக்கட்டுரை முற்படுகிறது.

நம்பியாண்டார் நம்பி, 'திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருசண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலகம்பம்,ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை, திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை' எனும் பக்திப் பனுவல்களைப் பாடிப்போந்தார்.

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், வித்துவான் க. வெள்ளை வாரணனார் போன்றோரின் ஆராய்ச்சிக் கருத்துக் களின் படி, திருமுறைகண்ட புராணம் என்பது ஒரு கட்டுக்கதை அல்லது புளுகு எனக் கொள்ளின் அப்புராணங் கூறுகின்ற 'அவர்

8 பாஸ்கரன் க.-சமுதாய தத்துவம் -ப.93

பொல்லாப்பிள்ளையாரின் திருவருளைப் பெற்ற அருளாளர்' என்பது மட்டும் எவ்வாறு உண்மையாகும் எனும் வினா மேலெழுகிறது. ஆகவே நம்பியாண்டார் நம்பி ஒரு சராசரி மனிதர் என்றாகிறது. சுந்தரருக்கு இறைவனே திருத்தொண்டர் தொகை பாட அடியெடுத்துக் கொடுத்தான். சேக்கிழார் 'உலகெலாம்' எனப் பாடவும் இறைவனே அடியெடுத்துக் கொடுத்தான். இவ்விரு செய்திகளையும் மேற்படி அறிஞர்கள் எங்கேனும் மறுத்துரைக்கவில்லை என்பதும் சுட்டத்தக்கது. ஆகவே முதன்னூல், விரிநூல் இறையருளின் படி அருளப்பட, வகை நூலான திருத்தொண்டர் திருவந்தாதி இறைபக்தி கொண்ட சாதாரண சைவ அன்பரால் பாடப்பட்டதொன்றாகிறது.

தமிழில் தொண்டர்களின் பெருமையை ஒருங்கே பாடிய முதல்வராக சுந்தரர் திகழ்கிறார். அடியார் வணக்கத்தை ஒரு வழிபாட்டு நெறிமுறையாக இவர் முன்னெடுக்கிறார். சம்பந்தர், அப்பர் என்போருக்கிடையிலான உறவைப் பெரியபுராணம், அடியார் வணக்கம் எனும் தளத்தில் எடுத்துரைத்தாலும் அவர்தம் திருப்பதிகங்களில் அவை ஒரு முறையியலாக உரைக்கப்படவில்லை. அதனை ஒரு முறையியலாக இறை வணக்கத்திற்குச் சமமாக - சற்று அதற்கு மேலாக சுந்தரரே எடுத்துரைத்தார். தனை விரித்துத் தொண்டு புரிதலை மையக் கருவாக்கிப் பல அடியவர்களின் வரலாற்றைக் காப்பியமாகச் செய்த முதல்வர் சேக்கிழாரே என்பதில் ஐயமில்லை. இவ் விருவர்க்கும் இடையில் வகைநூல் செய்த – திருத்தொண்டர் திருவந்தாதி தந்த நம்பியாண்டார் நம்பியின் வகிபாகம் என்ன? எனும் வினாவெழுகிறது.

சுந்தரரின் அடைமொழிகளில் சிறப்புக்களை காணும் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்[9].

> 'நம்பியாண்டார் நம்பி சேக்கிழாரைப் போல புலமையோ, ஆராய்ச்சி அறிவோ பெற்றவர் அல்லர் என்பது தெளிவு. அவர் எல்லா இடங்களையும் சென்று சுற்றிப் பார்த்து ஒவ்வொரு நாயனாருடைய வரலாற்றையும் நன்கு ஆராய்ந்து

9 பெரியபுராணம் ஓர் ஆய்வு – பக்.660-664

தெளிந்து கூறினார் என்றுங் கொள்ள முடியாது. இந்த நிலையில் நம்பியாண்டார் நம்பி செய்துள்ள பேருபகாரத்துக்குப் பெரிதும் நன்றி பாராட்டுகிறார் என்றாலும் முற்றிலும் அவரை ஆதாரமாகக் கொண்டு தம் வரலாற்றுக் காப்பியத்தை அமைக்கச் சேக்கிழார் தயாராக இல்லை என்பது மறக்கமுடியாத உண்மை'[10].

என்கிறார். மேலும், சேக்கிழார்,

'திருத்தொண்டர் தொகையை முற்றிலுமாக ஏற்றுக்கொண்டார். நம்பியின் திருவந்தாதியைப் பெரிய அளவில் ஏற்றக் கொண்டாலும் ஒரு சில விடயங்களில் அவரினும் மாறுபட்டுப் பாடுகிறார் என்ற கருத்து நீண்ட நாட்களாக இருந்து வரும் ஒன்றாகும்'[11]

என்கிறார். நீண்ட நாட்களாக இருந்து வருகிறது என்பதற்காக ஒரு கருத்தை நாம் ஏற்க வேண்டியதில்லை. நம்பியில் சேக்கிழார் மாறுபடுகிறார் என்பதை அ.ச.ஞானசம்பந்தன் ஒரே பக்கத்தில் இருதரம் கூறினும் அதற்கு எடுத்துக்காட்டுக்கள் தரவில்லை. கண்ணப்பர் பற்றிய வெளிப்பாட்டில் நம்பி, நக்கீரர், கல்லாடர் என்போர் முரண்பட செய்திகளைக் கூறுகின்றன என்கிறார். நம்பியுடன் சேக்கிழார் முரண்கொள்கிறாரா என்பதைக் கூறவில்லை.

நிலத்தில் திகழ்திருக் காளத்தியார் திரு நெற்றியின் மேல்
நலத்தில் பொழிதரு கண்ணில் குருதிகண்டு உள் நடுங்கு
வலத்தில் கடுங்கணையால் தன் மலர்க்கண் இடந்து அப்பினான்
குலத்தில் கிராதன் நம் கண்ணப்பனாம் என்று கூறுவரே[12]

இது நம்பி, கண்ணப்பர் பற்றிக் கூறும் பாட்டு இங்கு இடம் - திருக்காளாத்தி, சம்பவம் காளாத்திநாதன் கண்ணில் இரத்தம் வருதல், கண்ணப்பனாரின் செயல் - தன் கண்ணை கணையால் பிடுங்கி அப்புதல், குலம் - வேடர் எனும் செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் சேக்கிழார் எதிலும் மாறுதல் பெறவில்லை.

10 பெரியபுராணம் ஓர் ஆய்வு –ப.65

11 மேலது

12 திருத்தொண்டர் திருவந்தாதி பா.11

காவியப் பண்பிற்கேற்ப முன்பின் கதைகளை அவர் இணைத்தார். அவை முழுவதும் உண்மையா? எனும் வினா மேற்கிளம்பாமல் இல்லை. அதனைச் சேக்கிழாரின் புனைவுத்திறன் எனலாம்.

அதேவேளை நம்பி, சேக்கிழாருக்குக் கிடைத்த அதிகாரம், செல்வாக்கு, ஏனைய யாவும் பெற்றிருப்பின் சேக்கிழார் போல் காவியம் பாடியிருக்கமுடியும். சேக்கிழாருக்கு சமூக, அரச ஆதரவு - ஏன் இறைவனே அடியெடுத்துக் கொடுக்கும் அளவிற்குப் பேராதரவு இருந்தது. இவையெதுவுமின்றி திருத் தொண்டர் தொகையின்வழி நின்று தம் ஆற்றல்களின்வழி தாமறிந்த, ஆராய்ந்த மற்றும் செவிவழிச் செய்திகளையும் கொண்டு முதன்முதல் தமிழ்மொழி வரலாற்றில் புலவர் வரலாற்றை - சைவ நாயன்மார் வரலாற்றைச் சிறப்புறச் சொன்ன முதல்வர் என்ற முடிவுக்கே வரமுடிகிறது. சுந்தரர் அடியவர் பற்றிய செய்தியை ஒற்றை வரிகளில் மட்டும் சொல்ல இவர் குறைந்தது ஒரு பாடலாவது பாடினார். அதில் சிவபெருமானுக்கும் குறித்த நாயனாருக்கும் இடையிலான தொடர்பு - இறைவனின் திரு விளையாடல் மற்றும் அதனை நாயனார் எதிர்கொள்ளும் விதம் என்பவற்றை மையமாகக் கொண்டு அந்நாயனார் பற்றித் தானறிந்த செய்திகளை சுவைகுன்றாது அந்தாதியாக ஆக்கிப் போந்தார். இது அவரின் ஆளுமைத் திறனை வெளிப்படுத்துகிறது.

இதில் சுவாரஸ்யமான இன்னொரு விடயம் யாதெனில் அனைத்து அடியவர் வரலாறும் சைவப் பெருந் தெய்வமான சிவபெருமானுடன் தொடர்புறுத்தப்பட்ட இவரின் வரலாறு மட்டும் விநாயகரோடு தொடர்புறுத்தப்படுகிறது. சிறுத்தொண்டர் - பரஞ்சோதியாய் வடநாட்டில் இருந்து கொண்டு வந்த விநாயகர் சிலையோடு தொடங்கும் தமிழ்நாடு விநாயகர் தல வழிபாட்டு வரலாறு, இவரது வரலாற்றில் உச்சம் பெறுவதோடு இவரது பாடல்களினூடு சிவபெருமானின் மகனான விநாயகர் சைவத்துடன் இரண்டறக் கலத்தல் மிகவும் அழுத்தமாக முன்வைக்கப்படுகிறது.

அதேவேளை கபிலதேவரின் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, அதிராவடிகளின் மூத்த பிள்ளையார் மும்மணிக்கோவை

போன்றனவும் விநாயகர் துதிப்பாடல்களாக அமைகின்றன. ஆனால் அவை விநாயகர் பெருமையை பல்வேறு உத்திகளால் வெளிப்படுத்துகின்றனவேயன்றி சைவத்துடன் - சிவத்துடன் பெரிதும் இணைத்துரைக்கவில்லை. உதாரணமாக,

நுந்தையும் நீயும் இந்தத்
தேசத்தவர் தொழுநாரைப் பதியுள் சிவக்களிறே[13]

நாரையூர் நம்பர் மகனாம்[14]

மன் நாரையூரான் மகன்[15]

நாரைப்பதி திகழும் கோனிற் பிறந்த கணபதி[16]

எனப் பலவாறு திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணி மாலையில் சிவ – விநாயகர் உறவுரைத்தலும் சைவ காணபத்திய இணைப்பும் இடம்பெறுதல் நம்பியின் சமய நோக்கைத் தெளிவுறுத்தும் ஓர் அம்சமாகும். அத்தோடு நாயன்மார்களின் பாடல்களில் விநாயகரை முன்னிட்டெழுந்த தலப்பதிகமாகவும் இதுவே அமைகிறது என்பது சுட்டத்தக்கது. இவற்றினூடாக சமய நல்லிணக்கத்தை இவர் முன் வைத்துள்ளாரெனலாம்.

இவரது பத்துப் பிரபந்தங்களுள் ஆறு பிரபந்தங்கள் திருஞானசம்பந்தர் பற்றியவை; ஒன்று நாவுக்கரசர் பற்றியது. ஞானசம்பந்தர் பற்றிய இவரது கூற்றுக்கள் சம்பந்தரை இவரின் ஞானகுருவாக வெளிப்படுத்தப்படுகின்றன. இதனை 'பொருவென என்னைத் தன் பொற்கழல் காட்டிப் புகுந்தெனக் கருளிய சீர்திரு ஞானசம்பந்தன்' எனும் வரிகளில் அறியலாம். அவரது வரலாறு, பெருமை, சைவத்தை மீட்டுருவாக்கம் செய்து அதன் விருத்திக்காக அவர் செய்த பணிகள் என்பவற்றைப் பல்வேறு பிரபந்த வடிவங் களினூடாகப் புலப்படுத்துகின்றார். திருமாலுக்கும் பிரமனுக்கும்

---

13 பா.4

14 பா9

15 பா.5

16 பா.16

அரியராய் இருந்த இறைவன் ஞானசம்பந்தருக்கு எளியரானார் என்கிறார்[17]. அவரை முன்னிலை, படர்க்கைப் பரவலில் கண்டு பாடுகிறார். தன்காலத்தில் நிலவிய, காளாமுக, பாசுபதப் பிரிவுகளுக்கும், அத்வைத அலைக்கும் சமண, பௌத்த பயில்வுக்கும் சமாந்தரமாகவும் அவற்றைத் தாண்டியும் சைவத்தைக் கொண்டு செல்ல ஞானசம்பந்தர், நாவுக்கரசர் வழியையே தான் பின்பற்றவும், மற்றையவரைப் பின்பற்ற வழிகாட்டவும் முனைகிறார் என்றே தோன்றுகிறது.

அக்கால சமூக, அரசியல், சமய பொருளாதார சூழலிற்கு ஏற்ப சிவனோடு விநாயகர், முருகன் உமை ஆகிய தெய்வங்களை இணைத்து சைவசமயத் தெய்வங்கள் ஆக்கினார். சைவச் செல் வாக்குச் சமாந்தரமாக வைணவம் இருந்த காலத்தில், அரசனைத் திருமாலாகக் காணும் இக்காலத்தில், அத்தெய்வம் சிவனுக்குக் குற்றேவல் செய்கிறது எனப்பாடினார்[18]. மூவர் வழி புராண இதிகாசக் கதைகளைக் கையாளுதல், தலப்பெருமை பேசுதல், பிரதேசவுணர்வு, இயற்கை வர்ணிப்பு, போன்றவற்றையும் கையாண்டுள்ளார். மூவர் வழி அகத்துறைச் செய்யுட்களைப் பாடினார். இறைவனின் தோற்றப்பொலிவு, அது கண்டு மயங்கும் பருவப் பெண்கள், காதல் போன்றன அவற்றுள் இடம்பெற்றன[19]. அர்த்தநாரியாக விளங்கும் இறையுருவை,

> கங்கை இடம் வலம் பூவலம் குண்டலம் தோடிடப்பால்
> தங்கும் கரம் வலம் வெம்மழு வீயிடம் பாந்தள் வலம்
> சங்கம் இடம் வலம் தோலிடம் ஆடைவலம் அக்கிடம்
> அங்கஞ் சரிஅம் பலவன் வலங்காண் இடம் அணங்கே[20]

இறையுருவின் வலப்பாகத்தில் (ஆண்) கங்கை, குண்டலம், தங்குகரம், பாந்தள், தோல், எலும்புமாலை, கொண்ட அம்பலவன் காட்சிதர இடப்பாகத்தில் (பெண்) மலர், தோடு, வெம்மழு

---

17 ஆளுடைய பிள்ளையார் அந்தாதி –பா.16

18 திருநாரையூர் - பா.10 கோயிற்திருப் -பா.8,7,10,16,18,27,30,44,45,49

19 கோயிற் திருபண்ணியார் விருத்தம் - பா.11,12,21,43,44

20 கோயிற் திருப்பண்ணியர் விருத்தம்.பா.50

சங்கம், ஆடை, அங்கம் கொண்ட அணங்காக, உமை காட்சி தருவதாக இப்பாடலமைகிறது. அர்த்தநாரீஸ்வர வடிவத்தை முழுமையாகச் சிறப்புறப் புலப்படுத்தும் பாடலாக இது அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனது புலமைத்துவத்தை வெளிப்படுத்திப் பிறரைக் கவர, பல பிரபந்த வடிவங்களை கையாண்டதோடு ஒன்றினுள் ஒன்றை உட்புகுத்தினார். உதாரணமாக 'கோயில் திருப்பண்ணியர் விருத்தம்' எனும் பிரபந்தத்தின் 32 பாடல்களையும் அந்தாதித் தொடையில் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகமே தமிழ்த் தோன்றிய 'இரண்டாவது கலம்பகம் ஆகும். பல்வேறு பா வகைகளை எடுத்தாண்டுள்ளார். விருத்தம், திருவிருத்தம் (கட்டளைக் கலித்துறை), வெண்பா என்பன அவற்றுட் சில. அதேவேளை வித்துவப் பாடல்களாக அவற்றை ஆக்காது எளிதில் பொருள் புரியக் கூடியவையாக ஆக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

> முகத்தால் கரியன் என்றாலும் தனையே முயன்றவர்க்கு
> மிகத்தான் எளியன் ....[21]

எனும் வரிக்கு உரையாசிரியர் தேவையில்லை.

## முடிவுரை

நம்பியன் ஆளுமைத்திறன் அவரின் சமயநோக்கு நிலையை விஸ்தரிக்கவும் தெளிவுறுத்தவும் உதவுகிறது. அவரது பணிகளும், ஆக்கவிலக்கியங்களும் அவரின் புலமைக்குச் சான்றாகின்றன. அ.ச.ஞானசம்பந்தனின் நம்பியாண்டார் நம்பி பற்றிய மதிப்பீடு குறைவுபட்டதாகவே காணப்படுகிறது. நம்பியின் பத்துப் பிரபந்தங் களுள் ஆறு சம்பந்தர் பற்றியது. 'புராணம் பாதி பிள்ளை பாதி' எனச் சொல்லத் தக்க வகையில் பெரியபுராணத்தில் பாதி சம்பந்தர் பற்றியது. தொண்டர்தொகை தந்த சுந்தரர் வழி நடந்தார் நம்பி. சேக்கிழார் சுந்தரரைக் காவிய நாயகனாக்கினார்.

21 திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை –பா.2

நாவுக்கரசரிற்குத் தனிப் பிரபந்தம் செய்தார் நம்பி. சேக்கிழாரும் தனியிடம் அளித்தார். நம்பியின் சமயநோக்கின் வழி தன்னதிகாரத்தையும் பயன்படுத்தி நடந்தவராகவே சேக்கழாரைப் பார்க்க முடிகிறது. ஆக, இது நம்பியின் சமயநோக்கின் வெளிப்பாடும் வெற்றியும் என்றே எம்மால் மதிப்பிட முடிகிறது.

தமிழ்ச் சைவப் புலவர் வரலாற்றை முதலில் செய்யுளில் உரைத்த தன்மையை மனதிற் கொண்டு முனைவர் சு.வெங்கடராமன் இவரைத் தமிழ் வியாசர் என வர்ணிக்கிறார்[22]. இவரது வரலாற்றைக் கூறும் திருமுறைகண்ட புராணச் செய்திகள் குறைபாடுகள் உடையனவாகவுள்ளன. அதனைப் பாடியவர் சித்தாந்த அட்டகம் தந்த உமாபதி சிவாச்சாரியார் என்பது உண்மைதானா என்பதும் சந்தேகத்திற்கடமானது. திருமுறைகளைத் தொகுப்பித்தவன் முதலாம் இராஜராஜனல்ல முதலாம் ஆதித்த சோழனே என்பதும் பெறப்படுகிறது. மூவரின் திருமுறைப் பகுப்பு நம்பியால் மீட்டுருவாக்கம் - மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டது. 9ஆம், 10ஆம், 11ஆம் திருமுறைகளை நம்பி தொகுக்கவில்லை என்பது வெளிப்படையானதாகிறது. தனது புலமைத்துவம் மற்றும் தொடர்பாடற்றினைப் பயன்படுத்தி எளிமையும் கவிச்சுவையும் உடைய பாடல்களை மூவர் வழிநின்று நம்பி ஆக்கிப் போந்துள்ளார். ஞானசம்பந்தரை ஞானகுருவாகக் கொண்டு தம் சமய நோக்கை விருத்தி செய்த நம்பி, காலத்தேவைக்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்ளவும் தவறவில்லை. விநாயகர், முருகன், உமை போன்ற தெய்வங்களை உள்வாங்கவும் திருமாலை சிவனின் கீழ்ப்பட்ட தெய்வமாகச் சித்தரிக்கவும் முற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அர்த்தநாரீஸ்வர வடிவத்தை முதன்மைப் படுத்தினார். பிற சமயத் தெய்வங்களைச் சிவனின் உறவுகளாக்கிச் சைவ சமயத் தெய்வங்களாக்கினார். இறைவணக்கப் பாடல்களும், அடியார் பெருமை மற்றும் அவர்களை வழிபடும் பாடல்களையும் ஆக்கினார். அவற்றின் வழி 'அன்பின் உயிர் நிலையே சமயம்' என்ற தன்னோக்கினைத் தெளிவுறுத்தினார்.

---

22 தமிழர் சமயமரபுகள், செல்லப்பா பதிப்பகம் - 2007 ப.27